செ.வெ. எண்: 375 நாள்: 29.06.2012

# செய்தி வெளியீடு

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பி.ஏ., / பி.எஸ்ஸி., முதலாம் ஆண்டு மாணவ, மாணவியர்களுக்கான தமிழ் பாடத்திட்டத்தில் திரு டி.செல்வராஜ் என்பவரால் எழுதப்பட்டுள்ள “நோன்பு” என்னும் சிறுகதைத் தொகுப்பு இடம் பெற்றுள்ளது. இந்தப் புத்தகம் 2012–2013– ஆம் ஆண்டுக்கான பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திரு டி.செல்வராஜ் என்பவரால் எழுதப்பட்ட “நோன்பு” என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் ஆகஸ்ட் 2005– ஆம் வருடம் வெளியிடப்பட்டது. இதில் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பற்றிய சிறுகதை இடம் பெற்றுள்ளது. இதில் ஆண்டாள் குறித்து தவறான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன என்ற தகவல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்கு வந்தது. இதைத் தொடர்ந்து, தமிழான்றோர்கள் மீதும், தமிழ் வளர்த்த பெரியோர்கள் மீதும் பெருமதிப்பும், மரியாதையும் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது பற்றி விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

இதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டதில், “நோன்பு” என்னும் சிறுகதைத் தொகுப்பின் இரண்டாம் பதிப்பு 2012–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது என தெரிய வந்துள்ளது. இந்த பதிப்பில் “ஆண்டாள்” பற்றிய சிறுகதை இடம் பெறவில்லை. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பி.ஏ., / பி.எஸ்ஸி., மாணவர்களுக்கான தமிழ்ப் பாடத்திட்டத்தில் “நோன்பு” என்னும் சிறுகதைத் தொகுப்பின் இரண்டாவது பதிப்பே சேர்க்கப்பட்டுளளது. இந்த இரண்டாவது பதிப்பில் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் குறித்த எவ்வித கதையும் இடம் பெறவில்லை.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**